# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 16.11.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஒவ்வொரு மனிதனும் இந்த உலகில் வரும்போது அவன் மரணமடைகின்ற ஒருநாளும் நிர்ணயிக்கப்படுகிறது. இன்னும் சொல்வதென்றால் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் அழிவு இருக்கின்றது என்று அல்லாஹ் கூறுகின்றான். மனிதனைப் பொருத்தவரை, இந்த தற்காலிக உலக வாழ்க்கை முடியும் போது, பிறகு எப்போதும் நிரந்தரமாக இருக்கக்கூடிய ஒரு வாழ்க்கையும் ஆரம்பமாகி விடும் என்ற நற்செய்தியையும் அல்லாஹ் வழங்கியுள்ளான். எவர்கள் அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்ப இந்த உலகில் செயல்படுவார்களோ, அல்லாஹ்வின் திருப்திக்கு எல்லா பொருள்களை விடவும் முன்னுரிமை வழங்குவார்களோ அவர்கள் அந்த நிரந்தரமான மறுவுலக வாழ்வில் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாகி விடுவர். அல்லாஹ்வின் மன்னிப்பும் கருணையும் அப்படிப்பட்டவர்களுக்கு தனது அருகிலுள்ள இடத்தை வழங்கும். ஏனென்றால் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக அவர்கள் முயற்சி செய்து கொண்டே இருந்தனர். அவர்கள் தமது வாழ்க்கையை குறிக்கோளுள்ள வாழ்க்கையாக ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்தனர். அல்லாஹ் தனது அடியார்களுக்காக நிர்ணயித்திருந்த அந்த நோக்கத்தை அடைவதற்காக அவர்கள் முயற்சி செய்தார்கள்.

அல்லாஹ்வின் கருணை மற்றும் மன்னிப்பின் விரிவான நிலையானது ஒரு மனிதனின் சிறிதிலும் சிறிதாக இருக்கக்கூடிய நன்மையின் காரணமாகக் கூட அவனை தனது போர்வையில் போர்த்தி விடுகின்றது என்பது சரிதான். அப்படிப்பட்ட மனிதன் தொடர்ச்சியாக இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக முயற்சி செய்யாமல் இருந்தாலும் சரியே! ஆனால், எந்த மக்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக முயற்சிகள் செய்வதை தனது அன்றாட அலுவல்களில் ஒன்றாக ஆக்கிக் கொள்கின்றனரோ, அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும், அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதற்காக எல்லா சமயத்திலும் தங்களுக்குள்ள ஆற்றல்களுக்கேற்ப முயற்சி செய்வதில் ஈடுபடுகின்றனரோ, அல்லாஹ்வுடைய மார்க்கத்தின் கண்ணியத்தை உயர்த்துவதும் அதை பரப்புவதுமே அவர்களது குறிக்கோளாக இருக்குமோ, எவர்களது உயர்வான நல்லொழுக்கம் தொடர்பாகவும் ஒவ்வொரு சிறியவரும் பெரியவரும் தமது நாவால் புகழ்ந்து கூறுகின்றார்களோ அவர்களைப் பற்றி இறைவனும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் அப்படிப்பட்ட மக்கள் சுவர்க்கம் செல்வது வாஜிபாகி விடுகின்றது என்று கூறியுள்ளார்கள். அல்லது மார்க்கத்திற்காக தங்களது உயிரை காணிக்கையாக வழங்கி சஹாதத்தின் உயர் தகுதியை பெற்றவர்கள் பற்றியும் அவர்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும் என்றும் அல்லாஹ் நற்செய்தி கூறியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான்: இந்த மக்கள் இந்த உலகை விட்டுச் சென்று விட்டனர் என்பதில் சந்தேகமில்லை. இந்த தற்காலிக தங்குமிடத்தை விட்டும் பிரிந்து அவர்கள் சென்று விட்டனர். உலகின் பார்வையில் இவர்கள் இறந்து விட்டனர் அல்லது கொல்லப்பட்டு விட்டனர். ஆனால் அல்லாஹ்விடத்தில் இவர்கள் நிரந்தரமான வாழ்க்கையைப் பெற்று விட்டனர். எனவே இப்படிப்பட்ட மக்களை மரணித்தவர்கள் என்று கூறாதீர்கள். அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட மக்கள் இந்த உலகை விட்டு பிரிந்து செல்வது அவர்களுக்கு பின்னால் இருப்பவர்களது வாழ்க்கைக்கான வழிவகைகளை செய்யக்கூடியதாக இருக்கின்றது. அப்படிப்பட்ட மக்கள் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர். அவனது பெயரின் கண்ணியத்தை உயர்த்துவதற்காக ஒவ்வொரு தியாகத்தையும் செய்வதற்கு தயாராக இருக்கின்றனர். எந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல் இந்த தியாகங்களைச் செய்கின்றனர். எங்கு அவர்கள் தங்களது நிரந்தரமான வாழ்க்கைக்கான ஏற்பாட்டை செய்கின்றனரோ அங்கு

தனது ஜமாஅத்திற்கும் தனது மார்க்க சகோதரர்களுக்கும் உண்மையான நிரந்தரமான வாழ்க்கைக்கான வழிமுறைகளையும் கற்றுத் தருபவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள்.

இன்று நாம் பார்க்கின்றோம். முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொண்ட ஜமாஅத்திலுள்ள நபர்கள் அல்லது அவர்களில் ஒரு பிரிவினர் ஒருபுறம் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் இஸ்லாத்திற்காகவும் நிரந்தர மனப்பான்மையுடன் ஈடுபடுவதில் தங்களது வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் கழிப்பதற்கு முயற்சி செய்கின்றனர். மேலும் இதற்காக தங்களது வாழ்வின் இறுதி நொடிகள் வரை போராடுகின்றனர். இதற்காக தங்களது உயிரை அர்ப்பணிக்கின்றனர். அல்லது இப்படிப்பட்ட மக்களும் உள்ளனர். அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏன் ஏற்றுக் கொண்டனர்? என்ற குற்றத்திற்காக கொடுமைக்காரர்களின் கொடுமைக்கு இலக்காகி இறைவன் முன்னால் சஹாதத்தின் உயர்தகுதியைப் பெற்ற நிலையில் ஆஜராகி விடுகின்றனர். இன்று நான் இப்படிப்பட்ட இரு நபர்களைப் பற்றி கூறுவேன். ஒருவர் ஜமாஅத்தின் தொண்டராவார். மற்றவர் சஹீதானவர் ஆவார்.

ஒருவர் தமது சிறு வயதிலிருந்து தமது மரணம் வரை முஹம்மதிய மஸீஹின் இராணுவத்தில் இணைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை உலகிற்கு எட்ட வைத்தார். அந்த தூதுச் செய்தியைப் பரப்புகின்ற பணி நிறைவடைவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இறைவன் வழங்கியிருந்த வாக்குறுதிக்கேற்ப அவர்களது உண்மைப் பேரன்பரான வாக்களிக்கப்பட்ட மஸீஹை அவன் இவ்வுலகில் அனுப்பினான்.

இந்த தூய அர்ப்பணிக்கும் மனப்பாங்கு கொண்ட ஜமாஅத்தின் தொண்டரின் பெயர் **ஹாஃபிஸ் ஜிப்ரேயில் ஸயீத்** ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது பிரச்சாரத்தை முழுமைப்படுத்துவதற்காக தனது வாழ்க்கையின் இறுதி நொடிகள் வரை தனது எல்லா விதமான தகுதிகளுடன் அவர் பணியாற்றி வந்தார். ஒரு உணர்வுடனும் உத்வேகத்துடனும் அவர் பணியாற்றி வந்தார். நிச்சயமாக ஜமாஅத்தின் ஒரு உண்மையான தொண்டராகவும், ஜமாஅத்திற்காக உண்மையாகவே தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவரைப் போன்று தனது அர்ப்பணித்தலின் உடன்படிக்கையை அவர் நிறைவேற்றியுள்ளார். அந்த ஜமாஅத்தின் தொண்டர் காதியானிலிருந்தும் ரப்வாவிலிருந்தும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள கானா நாட்டிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தார். அங்கு கல்வி கற்பதற்கான சரியான வசதி கூட இருக்கவில்லை. ஆனால் அல்லாஹ் அவரை தனது தந்தையாரின் நல்ல ஆசைகள் மற்றும் துஆக்களின் காரணமாக தனது மகத்தான நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கிய முழுமையான நிறைவான வேதத்தின் ஹாஃபிஸ் ஆக ஆக்கிவிட்டான். முழுமையாக அந்த வேதத்தை மனனம் செய்வதற்கான நல்வாய்ப்பை அவருக்கு வழங்கினான். திருக்குர்ஆனை மனனம் செய்த பெருமையை மட்டும் அவர்களுக்கு வழங்கவில்லை. மாறாக, மார்க்கத்தின் ஞானத்தைப் பெற்று கொள்பவரது அணியில் அவரை நிற்க வைத்து திருக்குர்ஆனின் மகத்தான போதனைகளை தமது சமுதாய மக்களுக்கும் பிற சமுதாய மக்களுக்கும் எட்ட வைக்கின்ற பணியைச் செய்வதற்கான வாய்ப்பையும் தனது அருளால் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கினான். இவ்வாறு கானாவைச் சார்ந்த இந்த பற்றுள்ள தூய மனிதர் காலத்தின் கலீஃபாக்களின் சிறப்பான உதவியாளராக இருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் கானாவிற்கு பல பெருமைகளையும் சேர்த்துள்ளார்.

ஹாஃபிஸ் ஜிப்ரயீல் ஸயீத் சாஹிப் அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு கானாவில் வஃபாத் ஆகியுள்ளார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவர்களைப் பற்றி மேலும் சில விபரங்களை நான் கூறுகின்றேன்.

மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் அஹ்மது ஜிப்ரயீல் ஸயீத் சாஹிப் கானாவில் ஜமாஅத்தின் முபல்லிக் ஆகவும் இருந்தார்கள். கானா ஜமாஅத்தின் துணை அமீராகவும் இருந்தார்கள். 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் தேதி அருளுக்குரிய ஜூமுஆ நாளன்று அக்ராவிலுள்ள கைகுவோ மருத்துவமனையில் ஒரு

மாதம் வரை நோய்வாய்ப்பட்டிருந்த பிறகு இவர் வஃபாத் ஆனார். அந்த நாளில் நான் அவருக்காக துஆ செய்யுமாறு அறிவிப்பு செய்திருந்தேன். ஆனால், அந்த சமயத்தில் அவர் அல்லாஹ்வின் முன்பாக ஆஜராகி இருந்தார். நீண்ட காலமாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். இவரது உடல்நிலை தொடர்பாக கானாவின் மருத்துவர்களின் அறிக்கை இங்கு இலண்டனிலும் அமெரிக்காவிலும் உள்ள மருத்துவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஏனென்றால், அங்குள்ள மருத்துவர்களுக்கு என்ன நோய் அவருக்கு வந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. இந்த மருத்துவர்களின் ஆலோசனைக்கேற்ப மேலும் பல பரிசோதனைகள் எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இவ்வாறே சிகிச்சைக்காக வெளிநாட்டிற்கு அதாவது இலண்டன் அல்லது அமெரிக்காவிற்கு அவரை அனுப்புவது தொடர்பாகவும் சிந்தித்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இறைவனது விதி மிகைத்து நின்றது. இவ்வாறு அவரது வஃபாத் நிகழ்ந்து விட்டது.

மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள் 1954 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ம் தேதி பிறந்தார்கள். அவர்களது தந்தையாரான சோவோ ஜிப்ரயீல் ஸயீத் சாஹிப் கானாவின் முபல்லிக் ஆக இருந்தார். அவர்கள் அங்கேயே மிஷ்னரீஸ் மூலமாக முபல்லிக்கிற்கான பயிற்சியைப் பெற்று செயற்களத்தில் பணியாற்றினார். மேலும் அவர் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற முபல்லிக் ஆக திகழ்ந்தார்.

ஹாஃபிஸ் அஹ்மது ஜிப்ரயீல் ஸயீது சாஹிப் அவர்கள் 1970 ஆம் ஆண்டில் திருக்குர்ஆனை மனனம் செய்வதற்காக ரப்வா சென்றார்கள். மத்ரஸதுல் ஹிப்ஸில் சேர்ந்தார். அவர்கள் இறைவன் அருளால் கானாவின் முதல் திருக்குர்ஆன் ஹாஃபிஸ் ஆவார்கள். அவர்களுக்கு இந்த பெருமையும் கிடைத்துள்ளது. அதாவது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கைகளைப் பிடித்து பலம் பார்க்கும் போட்டியில் இவருடன் போட்டியில் கலந்து கொண்டார்கள். அவர் திருக்குர்ஆனை மனனம் செய்த பிறகு கானாவிற்கு வந்தார்கள். சில மாதங்களுக்குப் பிறகு ஜாமிஆவில் படிப்பதற்காக திரும்பிச் சென்று விட்டார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். 1982 ஆம் ஆண்டில் ஸாஹிது பட்டத்தைப் பெற்றார்கள். அத்துடன் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் ஃபாஸில் அரேபிக் –கிற்கான தேர்வை எழுதி அதிலும் வெற்றி பெற்றார்கள். அவர்கள் ஸாஹிது தேர்வில் தேர்ச்சி பெற்று கானா வந்த சமயத்தில் 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் தேதி கானாவிலுள்ள ஒரு நகரமான டச்சிமானில் பணியமர்த்தப்பட்டார்கள். அங்கு அந்த மண்டலத்தின் அதாவது கான்கால்ஃப் மண்டலத்தின் பொறுப்பை அவர்கள் ஏற்றார்கள். நான்கு வருடங்கள் கழிந்த பிறகு அவர் ஃபிஜி தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு டாபாஸாவில் அவர்கள் பணி அமர்த்தப்பட்டார்கள்.

ஃபிஜியிலிருந்து 1987 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அவர்கள் டுவாலுவிற்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் முறையாக டுவாலுவின் முதல் முபல்லிக் ஆக நியமிக்கப்பட்டார்கள். டுவாலுவில் இருந்த சமயத்தில் தென் பசிபிக்கிலுள்ள மூன்று நாடுகளான மார்ஸல் ஐலண்ட், சாலமன், ஐலண்ட், மைக்ரோனேஷியா ஆகியவற்றில் அஹ்மதிய்யத் வேரூன்றும்படி செய்தார்கள். அங்கு ஜமாஅத்துகளை நிறுவினார்கள். உலகிலுள்ள மூன்று நாடுகளில் அஹ்மதிய்யத்தின் செடி அவர்களால் நடப்பட்டது என்ற பெருமையையும் அவர்கள் பெற்றுள்ளார்கள். டுவாலுவில் இருந்த சமயத்தில் 1991 ஆம் ஆண்டில் பக்கத்து நாடான கிரீபாத்தியிற்கு அவர்கள் சென்றார்கள். மிக நீண்ட காலம் அவர்கள் இங்கு தங்கியிருந்தார்கள். இவ்வகையில் கிரீபாத்தி என்ற நாட்டின் முதல் முபல்லிக் ஆகவும் அவர்கள் திகழ்கின்றார்கள்.

தீவுகளில் தப்லீக் தொண்டுகளைச் செய்த பிறகு 1994 ஆம் ஆண்டில் அவர்கள் கானாவிற்கு திரும்பி வந்தார்கள். அவர்கள் கானாவிற்கு திரும்பி வந்த பிறகு அவர்களை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தப்லீகிற்காக கானா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் துணை அமீராக நியமனம் செய்தார்கள். மரணமடையும் வரை அவர்கள் இந்த கடமையை மிகவும் சிறப்பாக நிறைவேற்றி வந்தார்கள். அவர்களின் கண்காணிப்பின் கீழ் கானாவில் நியமிக்கப்பட்டுள்ள தர்பிய்யத் மையங்கள், தப்லீக் மையங்கள் ஆகியவற்றில் கண்ணியத்திற்குரிய இமாம்கள் மற்றும் புதிதாக பைஅத் செய்தவர்களின் தர்பிய்யத்திற்காக பல வகுப்புகளும் நடத்தப்பட்டன. ஜமாஅத்தில் இணைகின்ற உள்ளூர் முஅல்லிம்கள் அல்லது இமாமிற்கு ஓரளவு மார்க்க அறிவு

இருக்கத்தான் செய்தன. இதைத் தவிர இஸ்லாத்தின் உண்மையான போதனைகள், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மரபுகள் தொடர்பாகவும் இவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காக Refresher Course கள் நடத்தப்பட்டன. இதையும் ஹாஃபிஸ் சாஹிப் அவர்களே கண்காணித்து வந்தார்கள். அவர்களது தலைமையில் பல வெற்றிகரமான தப்லீக் பணிகள் நடந்தன. இதன் விளைவாக ஜமாஅத்திற்கு எண்ணற்ற புதிய கனிகள் கிடைத்தன. புதிய ஜமாஅத்துகளும் நிறுவப்பட்டன. புதிய Circle களும் உருவாக்கப்பட்டன. மேலும் இந்த ஜமாஅத்துகளில் எண்ணற்ற பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன.

இது மட்டுமல்ல. மிகத் தொலைவிலுள்ள இடங்களில் எங்கு ஒன்றிரண்டு முறை பைஅத்திற்கான தொடர்புகளை ஏற்படுத்திய பிறகு ஒரு நீண்ட காலம் வரை ஜமாஅத்தின் உள்ளூர் தலைமையகத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருந்து வந்ததோ, அங்குள்ள மக்களை அஹ்மதியல்லாத ஆலிம்களும் ஜமாஅத்திலிருந்தும் அவர்களை வெளியேற்றுவதற்கு முயற்சி செய்தவர்களும், அவர்களை தடுமாற்றம் அடையும்படி செய்த சமயத்தில் இம்மக்கள் அவர்களின் தாக்கத்திற்கு ஆளாகி விட்டனர். மேலும் ஜமாஅத்துடன் தொடர்புகள் இல்லாமல் போனதால் அவர்கள் Active ஆக இருக்கவில்லை. நான் இந்த மக்களை மீண்டும் நமது அருகில் கொண்டு வர வேண்டும் என்பதன் பக்கம் ஹாஃபிஸ் சாஹிபிற்கு வலியுறுத்தி அவர்களுடன் வலுவான தொடர்பை ஏற்படுத்துங்கள் என்று கூறிய சமயத்தில் இறைவன் அருளால் ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள் இதற்காகவும் முழுமையான முயற்சிகளைச் செய்தார்கள். மேலும் இலட்சக்கணக்கான எண்ணிக்கையிலிருந்த இத்தகைய மக்களை ஜமாஅத் அமைப்புடன் அவர்கள் எந்த அளவு ஒன்றச் செய்தார்கள் என்றால் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்துடன் அவர்களுக்கு வலுவான தொடர்பு ஏற்பட்டது. அதில் அவர்கள் நிலைத்திருக்கின்றனர். தங்களது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் அவர்கள் வலுவடைந்து வருகின்றனர்.

ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள் பசிபிக் தீவுகளில் குடிபெயர்ந்துள்ள மக்கள் சார்பாக அஹ்மதிய்யத் தொடர்பாக கேட்கப்படும் ஆட்சேபனை வடிவில் அமைந்துள்ள குறிப்பிட்ட கேள்விகளை கருத்தில் கொண்டவாறு அவர்களுக்கு தப்லீக் செய்வதற்காக ஒரு நூலையும் எழுதியுள்ளார்கள். Islam in the Islands; Romoving the Impediments என்பது இந்த நூலின் பெயராகும். கடந்த வருடம் 2011 ஆம் ஆண்டில் U.K. வின் ஆண்டு மாநாட்டில் “கிலாஃபத் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தனித்துவம் வாய்ந்த சிறப்பம்சமாகும்” என்ற தலைப்பில் ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள் இங்கு சொற்பொழிவும் நிகழ்த்தினார்கள். கானா சென்ற பிறகு அதாவது நீண்ட நாட்களை பசிபிக் நாடுகளில் அவர்கள் கழித்த பிறகு அங்கிருந்து திரும்பி வந்த பிறகும் கூட இந்த நாடுகளில் சுற்றுப்பயணங்களை மேற்கொள்வதற்காக ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அங்கு இவர்களுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. இவர்கள் தப்லீக் செய்யும் முறையும் மிகவும் சிறப்பாக இருந்தது.

2001 ஆம் ஆண்டில் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் அவர்கள் இந்த தீவுகளிலும் நாடுகளிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள். 2003 ஆம் ஆண்டிலும் தென் பசிபிக்கிலுள்ள இந்த தீவுகளுக்கும் நாடுகளுக்கும் சுற்றுப்பயணத்திற்காக அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். 2001 ஆம் ஆண்டில் அவர்கள் மேற்கொண்ட ஒன்றரை மாத சுற்றுப்பயணத்தில் அப்போது அந்த நாடுகளில் வலுவான தொடர்புகளை ஏற்படுத்தினார்கள். அவற்றில் மேற்கு சோமோவா, டோன்கா, கிரிபாத், சாலமன் ஜலண்ட், வோல்வாது மற்றும் டுவாலு ஆகியவை அடங்கும். இங்கு ஜமாஅத்துகளை ஒருங்கிணைத்து மேலும் பைஅத்துகளையும் பெற்றார்கள். சாலமன் ஜலண்டில் ஹாஃபிஸ் ஜிப்ரயீல் ஸயீத் சாஹிப் அவர்கள் மூலமாக 1988 ஆம் ஆண்டில் அஹ்மதிய்யத்தின் செடி நடப்பட்டது. சிறிது காலம் வேறு பணிகளில் ஈடுபட்டு மற்ற தீவுகளுக்கு சென்று விட்டதன் காரணமாக இங்கு அவர்களால் செல்ல முடியவில்லை.

இது தொடர்பாக 1991 ஆம் ஆண்டு இவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு ஒரு அறிக்கையை அனுப்பி வைத்தார்கள். அதில் நான் இங்கு இரண்டு வருடத்திற்கு பிறகு வந்துள்ளேன். இரண்டு வருடங்களுக்கு முன்னால் நான் செய்த பணிகள் அனைத்துமே முழுவதுமாக முடிந்து போய் விட்டதை பார்க்கின்றேன். ஃபிஜி தீவிலிருந்தும் முஸ்லிம் லீகைச் சார்ந்த ஒரு Business man இங்கு வந்தார். இங்குள்ள

எல்லா நபர்களது உள்ளத்திலும் சந்தேகங்களை உருவாக்கி விட்டு அவர்களை ஜமாஅத்தின் மீது வெறுப்படையும்படி செய்து விட்டார். நான் எனது பணிகளும் சீர்கெட்டு விட்டதைப் பார்த்து முற்றிலும் நடுங்கி விட்டேன். ஹுஸுர்! இது எனது குற்றமாகும். நான் மிகுந்த பணிவுடன் உங்களிடம் மன்னிப்பை வேண்டுகிறேன். மற்ற தீவுகளில் பணிகளில் ஈடுபட்டிருந்ததால் இங்கு என்னால் வர முடியாமல் போய் விட்டது. கடந்த வருடம் இங்கு வருவதாக Programme இருந்தது. ஆனால் டிசம்பர் மாதம் வரை கிரீபாத்திலேயே இருக்க வேண்டும் என்ற கட்டளை எனக்கு கிடைத்தது. ஹுஸுர்! நான் மீண்டும் அந்தப் பணியை தொடங்க வேண்டும். அல்லாஹ் எனது நோக்கத்தில் என்னை வெற்றி பெற வைப்பதற்கு துஆ செய்யுங்கள். முஸ்லிம் லீகிற்கு குவைத்தின் உதவி கிடைக்கின்றது.

முஸ்லிம்கள் பணம் கொடுத்து சிலரை அங்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் இஸ்லாம் இவர்கள் மூலமாகத்தான் அங்கு எட்டியது.

குவைத்தின் உதவி கிடைத்து வரும் முஸ்லிம் லீகை நாம் தோற்கடிக்க வேண்டும் என்று இவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். அதைப் பார்த்து விட்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது வேதனையையும் வெறுப்பையும் வெளிப்படுத்தியிருந்தார்கள். இதற்குப் பிறகு ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள் ஒரு நொடிப்பொழுது கூட அமைதியாக அமரவில்லை. தான் இழந்து விட்ட அனைத்தையுமே திரும்ப பெற வேண்டும் என்ற உறுதியான எண்ணத்தை அவர் மேற்கொண்டார். பிறகு தொடர்ந்து இரண்டு வருடங்கள் வரை இதற்காக உழைத்து வந்தார். இந்தப் பகுதியில் மீண்டும் அஹ்மதிய்யத்தின் செடியை நட்டிய பிறகே அவரால் பெருமூச்சு விட முடிந்தது. இறைவன் அருளால் இங்கு ஒரு வலுவான ஜமாஅத் நிறுவப்பட்டுள்ளது. இங்கு அஹ்மதிகளின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் இருக்கின்றது. அதில் வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே செல்கிறது. உயர் அதிகாரிகளை சந்தித்து ஜமாஅத்தை Registration செய்யும் பணியிலிருந்து ஜமாஅத்தின் செயற்குழுவை வடிவமைப்பது அவர்களுக்கு பயிற்றி அளிப்பது ஆகிய பணிகளையும் ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள் செய்துள்ளார்கள். ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள் அதற்குப் பிறகு தமது பல்வேறு சுற்றுப்பயணங்களின் போது ஜமாஅத்தை வலுப்பெறச் செய்து அதை உறுதியாக நிலைநிற்கும்படி செய்வதில் முக்கியமாக பங்கு வகித்துள்ளார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று இங்கு ஜமாஅத் Register செய்யப்பட்டு விட்டது. முறையாக பிரச்சார நிலையங்களும் இங்கு உள்ளது. பள்ளிவாசலும் இருக்கின்றது.

சாலமன் ஐலண்டின் தலைவரான முபஸ்ஸிர் மார்ட்டின் ருஸ்ஸல் சாஹிப் அவர்கள் 2005 ஆம் ஆண்டு நான் ஆஸ்திரேலியாவிற்கு சென்ற சமயத்தில் அங்கு வந்து என்னை சந்தித்தார்கள். அப்போது அவர் நான் ஹாஃபிஸ் ஜிப்ரயீல் ஸயீத் சாஹிப் அவர்கள் மூலமாக 1994 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டேன் என்று கூறினார். பிறகு எங்களது இந்த நாட்டில் அஹ்மதிய்யத் வருவதற்கு முன்னால் ஒரு முஸ்லிம் கூட கிடையாது. இவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாகத்தான் இந்த நாட்டில் முதன்முறையாக இஸ்லாம் நுழைந்தது. இந்த நற்பாக்கியம் ஹாஃபிஸ் ஜிப்ரயீல் ஸயீத் சாஹிப் அவர்களது பங்கில் வந்தது என்று என்னிடம் கூறினார்.

**தனது ஒரு பழைய ரிப்போர்ட்டில் ஹாஃபிஸ் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி ஃபிஜி தீவிற்கு வந்தேன். செப்டம்பர் மாதம் 10 ஆம் தேதி மார்ஸல் ஐலண்டிற்கு செல்வதற்காக புறப்பட்டு கரீடாஸில் இரண்டு நாட்களுக்காக டிரான்ஸிட் என்ற வகையில் தங்கினேன். செப்டம்பர் மாதம் 11 ஆம் தேதி நான் டிரான்ஸிட்டில் இருக்கும் நிலையில் அமெரிக்காவில் World Trade Centre தகர்க்கப்படும் சம்பவம் நிகழ்ந்தது. மார்ஸல் ஐலண்டில் அமெரிக்காவின் மிகப்பெரும் இராணுவ தளம் இருந்ததால், மேலும் இந்த நாட்டில் தற்காப்பு அமைப்பு அமெரிக்காவின் கைகளில் இருந்ததால் இயல்பாகவே இப்போது நிலைமை எவ்வாறு இருக்குமோ என்ற கவலை ஏற்பட்டது. ஏனென்றால் பத்து வருடங்களுக்கு முன்பு வளைகுடா போர் நடந்த சமயத்தில் நான் இங்கு இருந்தேன் என்பது இந்த எளியவனுக்கு நினைவு இருக்கின்றது. அப்போது மிகுந்த கஷ்டங்களை சந்திக்க வேண்டியது வந்தது.

அவர் எழுதுகின்றார்: நான் அதிகமாக துஆ செய்தேன். சிறிது காலம் வரை காத்திருக்கலாமா? அல்லது திரும்பிச் சென்று விடலாமா? என்று சிந்தித்தேன். நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கின்றது. நீங்கள் தப்லீக் செய்வதற்கு மிகவும் தவறான ஒரு சமயத்தை தேர்ந்தெடுத்துள்ளீர்கள். நீங்கள் உடனடியாக திரும்பி செல்வதுதான் சிறந்தது என்று எனக்கு ஆலோசனைகள் கூறப்பட்டன.

கூறுகின்றார்: அதற்குப் பிறகு நான் அதிகமாக துஆ செய்தேன். நான் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கட்டளைக்கேற்பவே வந்துள்ளேன். இந்த நோக்கத்தை அடையாமல் நான் திரும்பிச் செல்ல விரும்பவில்லை. ஆனால் நிலைமைகள் மிகவும் மோசமாகவே உள்ளன.

கூறுகின்றார்: துஆ செய்த பிறகு நெஞ்சம் இதன் பக்கம் திறந்தது. அதாவது எந்த பணிக்காக நான் வந்துள்ளேனோ அதை செய்து முடிக்க அங்கு செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தேன். இந்த எளியவன் கப்பல் மூலமாக மார்ஸல் ஐலண்ட் சென்றேன். அமெரிக்காவில் இந்த சம்பவம் நிகழ்ந்த பிறகு எல்லா விமான நிலையங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் கடுமையாக இருந்தது. அங்கு முதலிலேயே ஒரு பாகிஸ்தானியை அவர் முஸ்லிமாக இருக்கின்றார் என்ற ஒரே காரணத்திற்காக Detain செய்திருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: Immigration Officer எனது பாஸ்போர்ட்டை பார்த்து விட்டு நீங்கள் என்ன வேலை செய்கின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு நான் மிஷ்னரியாக இருக்கின்றேன் என்று கூறினேன். இவர்களது பெயர் மூலமாக இவர்களும் முஸ்லிம் ஆவார்கள் என்று அவர் ஒருவேளை கணித்திருக்கலாம். பிறகு அவர் உங்களுடைய மதம் என்ன? என்று கேட்டார். அதற்கு நான் அஹ்மதி முஸ்லிம் ஆவேன் என்று பதில் கூறினேன். சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு மீண்டும் எனது மதம் தொடர்பாக அவர் கேட்டார். மீண்டும் அதே பதிலை நான் அவரிடம் கூறினேன். நான் அஹ்மதி முஸ்லிம் ஆவேன் என்றேன். அதற்குப் பிறகு அவர் எனக்கு ஒரு மாதத்திற்கான விசா வழங்கினார். அல்லாஹ்வின் அருளால் இவ்வாறு எனக்கு Entry கிடைத்தது.

**பிறகு ஒரு கடிதத்தில் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

இந்தப் பகுதிகளுக்கு வந்த பிறகு குறிப்பாக எல்லா மீடியாக்களும் இஸ்லாத்திற்கு எதிராக செயல்பட்டு வரும் இந்த சமயத்தில், மேலும் அல்கொய்தா மற்றும் உஸாமா பின் லேடன் ஆகியவற்றை முன் வைத்து இஸ்லாத்தின் மீது வலுவான தாக்குதல் நடத்துகின்ற போது சுற்றுப்பயணத்தை மேற்கொள்வது மிகவும் அவசியமானதாகும் என்பது எனக்கு தெரிய வந்தது. நியூயார்க்கில் இந்த சம்பவம் நடைபெற்ற பிறகு மக்கள் இஸ்லாம் தொடர்பாக பேசுவதற்கே தயாராக இல்லை. பெரும்பாலான மக்கள் முஸ்லிம்களுக்கு அருகில் வரவே அஞ்சினர். அப்போது அந்த சமயத்தில் மீடியாவிலும் மற்ற சந்தர்ப்பங்களிலும் இஸ்லாத்தை தற்காப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. உள்ளூர் அஹ்மதிகளை அவர்கள் இஸ்லாத்தை தற்காப்பதற்காக தயார் செய்தேன். கரீபாஸின் ரேடியோவில் இஸ்லாத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட Propoganda காரணமாக நமது அஹ்மதிகள் மிகவும் கவலையடைந்தனர். இந்த எளியவன் Brodcasting Corporation –ன் மேனேஜருடன் தொடர்பு கொண்டேன். அவரிடம் பேசுவதற்காக நேரம் கேட்டிருந்தேன். அல்ஹம்துலில்லாஹ் எனக்கு நேரம் தரப்பட்டது. நான் எல்லா விசயங்களைப் பற்றியும் அல்கொய்தா, இஸ்லாம் கூறும் ஜிஹாது ஆகியவற்றைப் பற்றி அவருக்கு தெளிவாக எடுத்துக் கூறினேன். அல்ஹம்துலில்லாஹ் இதற்கு நல்ல பலன் கிடைத்தது.

கூறுகின்றார்கள்: அந்த சமயத்தில் காலத்தின் கலீஃபா அவர்கள் என்ன தீர்மானம் எடுத்தார்களோ அதாவது சரியான சமயத்தில் தீவுகளில் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும்படி கூறியதன் விளைவாக 2001 ஆம் ஆண்டிலிருந்தே இஸ்லாத்தை தற்காக்கும் பணியில் ஈடுபடுவதற்குரிய நல்வாய்ப்பு மட்டும் எனக்கு கிடைக்கவில்லை. மாறாக இதன் மூலம் இந்த சுற்றுப்பயணத்தில் 49 புதிய பைஅத்துகளைப் பெறுவதற்கான வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. முதலில் மக்கள் முஸ்லிம்களுக்கு அருகில் வரவே அஞ்சினர். ஆனால் அல்லாஹ்வின் அருளால் 49 புதிய பைஅத்துகளும் கிடைத்தன.

பிறகு கூறுகின்றார்கள்: அல்ஹம்துலில்லாஹ் அலா தாலிக். ஜமாஅத்துகளை உறுதியாக நிலைநிற்கும்படி செய்வதற்காக செயற்குழுவைத் தேர்ந்தெடுப்பது, ஜமாஅத்தை பதிவு செய்வது போன்ற எல்லா அம்சங்கள் தொடர்பாகவும் பணியாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது.

கானாவில் இவர்களுடன் பணியாற்றிய முபல்லிக்குகள், இறைவன் பக்கம் அழைக்கும் அழைப்பாளர்கள் ஆகியோர் கூறுகின்றார்கள்: அவர்களுக்கு தப்லீக் செய்வதிலுள்ள ஆர்வம் பைத்தியமாக செயல்படுவது என்ற அளவில் இருந்தது. இதற்காக அவர்கள் இரவு பகல் என்று பாராமல் உழைத்து வந்தார்கள். இறைவன் பக்கம் அழைக்கும் அழைப்பாளர்களின் குழுவை அனுப்பி வைக்கும் போது அவர்களே அவர்களுக்கு பின்னால் செல்வார்கள். அவர்களுடன் தங்கியிருப்பார்கள். பணிகள் எவ்வாறு நடக்கின்றன? எங்கெங்கு நடக்கின்றன? என்பதை ஆய்வு செய்து பார்ப்பார்கள். அவர்களிடம் அளவு கடந்த பொறுமையும் சகிப்புத்தன்மையும் இருந்தது. தனக்கு கீழிருப்பவர்கள் தவறு செய்தால் அவருக்கு மிகுந்த அன்புடன் அதை புரிய வைப்பார்கள். நண்பர்களது பணிகள் அவர்களது குடும்பம் தொடர்பான அறிவு அவர்களுக்கு இருந்தது. அவர்களது குடும்ப பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள். ஏதாவதொரு முபல்லிக்கிற்கு எதிராக ஏதாவது புகார் செய்யப்பட்டால் அவரை பணிநீக்கம் செய்வதற்குப் பதிலாக அதாவது உள்ளூர் முஅல்லிம்களைப் பற்றி புகார் செய்யப்பட்டால் அவர்களை பணிநீக்கம் செய்வதற்குப் பதிலாக அவர்களை மீண்டும் நல்ல முறையில் பணி செய்பவர்களாகவும் உழைப்பவர்களாகவும் ஆக்க வேண்டும். அவர்களை ஜமாஅத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக முயற்சி செய்வார்கள்.

சில மக்கள் மிக அவசரமாக முடிவெடுத்து விடுகின்றனர் இவரை பணிநீக்கம் செய்ய வேண்டும். இவரைப் பற்றி புகார் செய்ய வேண்டும் என்றே செயல்படுகின்றனர். அதற்காகவே முயற்சிகளைச் செய்கின்றனர். இவர் ஓர் அஹ்மதியிடமிருந்து குறிப்பாக முஅல்லிம்களிடமிருந்து எந்த அளவு பலன் பெற முடியுமோ அந்த அளவு பயன்பெற முயற்சி செய்வார்கள்.

**இவரது நண்பரான ஒரு முஅல்லிம் எழுதுகின்றார்:**

அஹ்மதியல்லாத பெரும் பெரும் ஆலிம்களுடன் இவர்களுக்கு தொடர்பிருந்தது. பெருநாள் போன்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அன்பளிப்புகளை அனுப்பி வைப்பார்கள். மிகவும் உழைக்கக் கூடியவராகவும் சிறந்த முறையில் செயலாற்றுபவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். கானாவின் வடக்குப் பகுதிகளில், அவர்களின் விரிவான தப்லீக் பணிகளின் விளைவாக அஹ்மதிய்யா ஜமாஅத் அங்கு நன்கு அறிமுகமாகி விட்டது.

கானாவில் இன்றிலிருந்து 20 வருடங்களுக்கு முன்பாக அல்லது 25 வருடங்களுக்கு முன்பாக அஹ்மதிய்யா ஜமாஅத் அங்கு, வடக்குப் பகுதியில் நுழைவது என்பதே மிகவும் கடினமாக இருந்தது. அது சாத்தியமற்ற ஒன்றாக இருந்தது. அப்போது வடக்குப் பகுதிகளில் ஒன்றிரண்டு நபர்களே அஹ்மதிகளானார்கள். ஏனென்றால், அங்கு மற்ற முஸ்லிம்கள் வலுவாக செயல்பட்டு வந்தார்கள். அங்குள்ள இமாமும் கடுமையாக எதிர்க்கக் கூடியவராக இருந்தார். இன்னும் சொல்வதென்றால் அஹ்மதிய்யத் அங்கு ஒன்றுசேர்ந்த ஆரம்ப நாட்களில் இந்தப் பகுதிகளில் தான் அதாவது வடக்குப் பகுதிகளில் அல்லது வடமேற்குப் பகுதிகளில் நமது அஹ்மதிகள் மீது வழக்குகளும் தொடரப்பட்டன. அபராதமும் விதிக்கப்பட்டது. அஹ்மதிகளை கைதும் செய்தனர். ஆனால் இப்போது அங்கு நிலைமை தலைகீழாக மாறி விட்டது. அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாசல்களும் உருவாகிக் கொண்டே செல்கின்றன. மேலும் இதே முஸ்லிம்களிலிருந்தும் அவர்களது இமாம்களிலிருந்தும் பலரும் ஜமாஅத்தில் இணைகின்றனர்.

இவர் கூறுகின்றார்: அப்போது ஜமாஅத் அங்கு நன்கு அறிமுகமாகி விட்டது. ஹாஃபிஸ் சாஹிப் அதிகமான மக்களுக்கு அமைதியான முறையில் ஸதக்காக்களை வழங்கி வந்தார்கள். அவர்களுக்கு ஏழைகள், பணக்காரர்கள் ஆகிய எல்லா தரப்பு மக்களுடனும் தொடர்பிருந்தது. மேலும் அவர்களது சொந்த பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு முழுமையாக முயற்சி செய்து வந்தார்கள். மக்களிடமிருந்து வேலை வாங்குவதற்கான சரியான வழிமுறைகள் அவர்களுக்கு தெரிந்திருந்தது.

கானாவிலுள்ள வசதி படைத்த செல்வந்தர்களாக இருக்கின்ற அஹ்மதிகளுடன் அவர்களுக்கு மிகவும் நல்ல தொடர்பிருந்தது. அவர்களது உதவியால் வடக்குப் பகுதிகளில் பள்ளிவாசல்களை உருவாக்கினார்கள். செல்வந்தர்களாக இருக்கும் அஹ்மதிகளிடம் அல்லாஹ் உங்கள் மீது இந்த அளவு அருள் செய்துள்ளான். இந்த அருளுக்கு நன்றி செலுத்துவது என்பது இத்தகு ஏழ்மையான பகுதிகளில் நீங்கள் அவர்களுக்கு பள்ளிவாசல்களை கட்டித் தர வேண்டும் என்று அவர்களிடம் தனது வேண்டுதலை வைப்பார்கள். இவ்வாறு அங்குள்ள உள்ளூர் மக்கள் பல இடங்களிலும் சிறிய சிறிய பள்ளிவாசல்களைக் கட்டியுள்ளார்கள்.

**M.T.A. வில் ஒரு நேர்காணலின் போது அவர்கள் கூறினார்கள்:**

அர்ப்பணித்தலும் ஜமாஅத்திற்காக தொண்டு செய்வது நமது இரத்தத்தில் கலந்திருக்கின்றது. எங்களது மரபணுக்களில் அது இருக்கின்றது. எங்களது தந்தையார் கானாவின் முதன் முபல்லிக் ஆக இருந்தார்கள். அதற்குப் பிறகு மதிப்பிற்குரிய சவுத்ரி முஹம்மது சரீஃப் சாஹிப் அவர்கள் இந்தப் பொறுப்பை வகித்தார்கள். பிறகு எனது தந்தையாருக்கு லைபீரியாவிலும் தொண்டு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது.

ஹாஃபிஸ் ஜிப்ரேயில் ஸயீத் சாஹிப் அவர்கள் உண்மையிலேயே தொண்டு செய்யும் உணர்வுகளால் நிரம்பியிருந்தார்கள். பொறுப்புணர்வு அவர்களிடம் இருந்தது. அவர்கள் மருத்துவமனையில் I.C.U. –வில் வைக்கப்பட்டிருந்தார்கள். பொதுவாக I.C.U. –வில் வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு எந்த உணர்வும் இருக்காது. அப்போது இறுதியாக அவர் எனக்கு எழுதிய கடிதத்தில் நான் I.C.U. –வில் இருக்கும் நிலையில் மிகவும் சிரமத்துடன் இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன். கண்களிலிருந்து கண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது. ஹுஸூர்! பணிகள் அதிகமாக இருக்கின்றன. சக்தி முற்றிலும் இல்லாமல் ஆகிவிட்டது.

கடைசி சமயத்தில் கூட எவ்வாறு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை நாட்டின் எல்லா மூலைகளிலும் எட்ட வைக்கலாம்? அதன் மூலம் கானாவை சார்ந்துள்ள அனைவரையும் நான் எப்படி அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் மடியில் கொண்டு வந்து அமர வைக்கப் போகின்றேன்? என்ற கவலையே அவருக்கு இருந்தது.

அவர் தமது ஒரு நேர்காணலில் அவர்கள் பாகிஸ்தான் சென்றது தொடர்பான சம்பவத்தையும் கூறியுள்ளார்கள். அது உள்ளத்தை மிகவும் ஈர்க்கக்கூடிய சம்பவமாகும். அவர்கள் கூறுகின்றார்கள்:

கானா ஜமாஅத் ஏதாவதொரு சிறுவனை திருக்குர்ஆன் மனனம் செய்வதற்காக பாகிஸ்தான் அனுப்ப வேண்டும் என்று முடிவெடுத்தது. பள்ளிக்கூட சிறுவர்களை ஆய்வு செய்து பார்த்த போது பிறகு என்னை அவர்கள் இதற்காக தேர்ந்தெடுத்தார்கள். எனது தந்தையார் என்னிடம் கேட்டதும் நான் எனது சம்மதத்தை தெரிவித்தேன். அப்போது முஹம்மது பின் சாலிஹ் சாஹிப் அங்குள்ள ஜமாஅத்தின் முபல்லிக் ஆவார். இப்ராஹீம் பின் யாகூப் சாஹிப் இவரும் கானாவைச் சேர்ந்தவர். முபல்லிக் ஆவார். இப்போது டிரினிடாடில் உள்ளார். இவர்கள் இருவரும் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படிப்பதற்காக பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட இருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: எங்கள் மூவருக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. அவர்கள் இருவரும் இதில் தேர்ச்சி பெற்றனர். என்னைப் பற்றி மருத்துவர் அவர்கள் இவர் மெலிந்து காணப்படுகிறார். எடையும் குறைவாக இருக்கின்றது. பாகிஸ்தானிலுள்ள சீதோசன நிலைமைகளை அதாவது கடுங்குளிரையும் கடுமையான வெப்பத்தையும் இவரால் சகித்துக் கொள்ள முடியாது என்று கூறி விட்டார். இவ்வாறு நான் தகுதியற்றவனாக ஆகி விட்டேன். இதனால் எனது தந்தையாருக்கு கடுமையான துக்கம் ஏற்பட்டது. அவர்கள் துஆவில் ஈடுபட ஆரம்பித்தார்கள். அப்போது கானா ஜமாஅத்தின் அமீராக இருந்த மதிப்பிற்குரிய அதாவுல்லாஹ் கலீம் சாஹிப் அவர்களிடம் ஹாஃபிஸ் சாஹிப் அவர்களின் தந்தையார் எனது மகன் கண்டிப்பாக பாகிஸ்தான் செல்வான் என்று கூறினார். அது எப்படி நடக்கும்? என்று அமீர் சாஹிப் அவர்கள் கேட்டார்கள். அப்போது எனது தந்தையார் அவர்களிடம், நான் தஹஜ்ஜுது தொழுது கொண்டிருந்தேன். அப்போது எனது காதுகளில் மிகவும் தெளிவாக இந்த குரல் கேட்டது. அதில், நிச்சயமாக இறையச்சமுள்ளவர்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று கூறப்பட்டது.

அவர்கள் கூறினார்கள்: இந்த நாட்களில் நான் எனது மகனுக்காக அதிகமாக துஆ செய்து கொண்டிருந்தேன். இந்த நற்செய்தி எனது மகனுக்காக கூறப்பட்டதாகும்.

கூறுகின்றார்கள்: எனது தந்தையார் எனக்கு Margarine உடைய ஒரு பாட்டில் வாங்கித் தந்தார்கள். இன்னும் சில உணவுப் பொருட்களையும் எனக்கு வழங்கினார்கள். அவற்றை நான் சாப்பிட வேண்டும் என்று கூறி எனது ஆரோக்கியத்தின் பக்கம் அவர்கள் கவனம் செலுத்தினார்கள். இரண்டு மூன்று வாரங்கள் கழிந்த பிறகு மீண்டும் நான் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பப்பட்டேன். அப்போது மருத்துவர்கள் மருத்துவரீதியாக நான் தகுதி உடையவனாக இருக்கின்றேன் என்று கூறினார்கள். மேலும் இந்த சிறுவன் முழுமையாக இதற்கு தகுதியுடையவனாக இருக்கின்றான். இவனுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்று எழுதினார்கள்.

கூறுகின்றார்கள்: நான் பாகிஸ்தானில் இருக்கும் போது எனது தந்தையார் எனக்கு கடிதம் எழுதும் போதெல்லாம் நீ அங்கு சென்றிருப்பது இறைவனுடைய விதியாகும். எனவே நல்ல முறையில் படிப்பின் பக்கம் கவனம் செலுத்து என்று எழுதுவார்கள். இவர்களும் தமது தந்தையாரின் விருப்பத்தை சிறந்த முறையில் நிறைவேற்றியுள்ளார்.

இவர்கள் தனக்கு பின்னால் தனது மனைவி ஹனாஸ் ஸயீது சாஹிபா அவர்களையும் இரண்டு மகன்களையும் இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார். இவர்களது பெயர்கள் ஹிப்பார் பாப், சபா கோஜோ, முனீரூல் ஹாகி மற்றும் தஹ்மீனா யஸின். இவர்களது பிள்ளைகளும் அல்லாஹ்வின் அருளால் மார்க்க, உலக கல்வியில் முன்னேற வேண்டும் என்பதே இவர்களது முயற்சியாக இருந்தது. ஜமாஅத்துடனும் இவர்களுக்கு வலுவான தொடர்பு இருக்கின்றது. மார்க்கக் கல்வியிலும் உலகக் கல்வியிலும் இவர்கள் முன்னேறியுள்ளனர். மூன்று பிள்ளைகள் M.Sc. படித்துள்ளனர். ஒரு மகள் Ph.d. படித்துக் கொண்டிருக்கின்றார்கள். 2007 ஆம் ஆண்டில் அல்லாஹ்வின் அருளால் மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் சாஹிப் அவர்களுக்கு ஹஜ் செய்வதற்காக செல்லும் நற்பாக்கியமும் கிடைத்தது.

ஜாமிஆவில் இவருடன் படித்து வந்த மதிப்பிற்குரிய இல்யாஸ் முனீர் சாஹிப் அவர்கள் ஜெர்மனியில் ஜமாஅத்தின் முரப்பியாக பணியாற்றி வருகின்றார்கள். அவர்கள் எழுதுகின்றார்கள்:

மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் ஜிப்ரேயில் ஸயீத் சாஹிப் அவர்கள் ஜாமிஆவில் என்னை விட ஒரு வகுப்பு ஜூனியர் ஆக இருந்தார்கள். ஆனால் மிகவும் முன்னேறிச் சென்று விட்டார்கள். நான் அவர்களை அவர்களது சிறு வயதிலிருந்தே ஒரு சிறு குழந்தையின் வடிவில் பார்த்துள்ளேன். அப்போது அவர்கள் தமது சிறு வயதில் அப்பாவி குழந்தையாக திருக்குர்ஆனை மனனம் செய்வதற்காக ரப்வாவிலுள்ள ஹிப்ஸ் வகுப்பில் சேர்ந்தார்கள். அவர்களுக்கு திருக்குர்ஆன் மனனம் செய்கின்ற நற்பேறு மட்டும் கிடைக்கவில்லை. மாறாக இயற்கையாகவே இறைவன் அவர்களுக்கு இனிமையான குரல் வளத்தையும் வழங்கியிருந்தான். ஜாமிஆவில் பல சந்தர்ப்பங்களிலும் ஆண்டு மாநாட்டு சந்தர்ப்பங்களிலும் அவர்களது இனிமையான குரலைக் கேட்டு இன்பம் அடைவதற்கான சந்தர்ப்பம் கிடைத்து வந்தது.

கூறுகின்றார்கள்: நான் அவர்களை தகுதியுடைய நபராகவும் தனது பணியிலும் அறிவிலும் உறுதியான நிலைபாட்டை உடைய முரப்பியாகவும் நான் அவர்களை பார்த்துள்ளேன். வலுவான உடல்வாகு பெற்றவராகவும் மிகவும் கீழ்படியும் தன்மை கொண்டவராகவும் நற்பாக்கியமுள்ள மனிதராகவும் அவர்கள் இருந்தார்கள். மிகவும் பலவீனமான குழந்தையாக அவர்கள் இருந்தார்கள். ஆனால் படிப்படியாக அவர்கள் முன்னேறினார்கள். ஜாமிஆவிலிருந்து அவர்கள் வெளியேறிய சமயத்தில் அவர்களது உயரமும் ஏறக்குறைய 6 அடியாக இருந்தது. வலுவான உடல் அவர்களுக்கு இருந்தது.

எழுதுகின்றார்கள்: மர்ஹூம் ஜமாஅத் அமைப்பை புரிந்து கொண்டவர்களாகவும் அதன் மிக சாதாரண விசயங்களைக் கூட கடைபிடித்து நடக்கின்ற மிகுந்த தூய்மையான மனிதராக அவர்கள் இருந்தார்கள். இவ்வாறே சகிப்புத்தன்மையும் அவர்களிடம் மிகுதியாக இருந்தது. ஒருமுறை ஒரு நண்பர் இவர் ஆப்பிரிக்கன் என்று நினைத்து, இவருக்கு பஞ்சாபி தெரியவா போகிறது? என்ற எண்ணத்தில், அவர்கள் இருக்கும் போதே

இன்னொருவருக்கு கட்டளை இட்டவாறு அவர்கள் தொடர்பாக பொருத்தமற்ற சில விசயங்களைக் கூறினார். ஆனால் அதை அவர் புரிந்து கொண்ட பிறகும் கூட அதை கூறியவருக்கு அதுபற்றி எதுவும் தெரியாத வகையில் அவர்கள் நடந்து கொண்டார்கள்.

**அல் ஃபஸ்ல் பத்திரிகையின் ஆசிரியரான அப்துஸ் ஸமீஃ கான் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஹாஃபிஸ் ஜிப்ரேயில் ஸயீது சாஹிப் அவர்களும் நானும் 1975 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரை ஜாமிஆ அஹ்மதிய்யாவில் Class Fellow ஆக இருந்து வந்தோம். ஹாஃபிஸ் சாஹிப் மிகுதியாக பொறுப்புணர்வு மிக்கவராகவும், ஜமாஅத்தின் மீது அன்பு கொண்டவராகவும், ஆசிரியர்களுக்கு மிகுந்த மரியாதை செலுத்துகின்ற மனிதராகவும் இருந்தார்கள். உர்து மொழியையும் நன்றாக கற்றுக் கொண்டார். மற்ற Class Fellow க்களுக்கு ஆங்கிலத்தை கற்பதில் உதவி செய்து வந்தார்கள். ஆங்கில மற்றும் அரபி சொற்பொழிவு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் அவர்கள் கலந்து கொள்வார்கள். நல்ல போட்டி இருந்தது. எப்போதும் மகிழ்ச்சியும் மலர்ச்சியும் இவரது முகத்தில் இருந்து வந்தது.

எப்படிப்பட்ட நிலைமை இருந்தாலும் இவர்களது முகத்தில் துக்கத்தின் எந்த அடையாளத்தையும் ஒருபோதும் நான் பார்த்ததேயில்லை. எப்போதும் புன்சிரிப்பு சிரித்து வந்தார்கள். கானாவில் அவர்களை நான் பார்த்துள்ளேன். அதற்குப் பிறகு இங்கும் அவர்களை நான் பார்த்துள்ளேன். விளையாடுவதிலும் அவர்களுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. அவர்கள் கால்பந்து நன்றாக விளையாடுவார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பணிகளில் சிறப்பாக பங்கு பெறுவார்கள். நண்பர்களுடனுள்ள பழைய தொடர்புகளை அவர்கள் நிலைநாட்டி வந்தார்கள். 2005 ஆம் ஆண்டில் காதியான் சென்ற சமயத்தில் எல்லா நண்பர்களுக்கும் அங்கு விருந்தளித்தார்கள்.

**அஹ்மது ஜிப்ரேயில் ஸயீது சாஹிப் தொடர்பாக இன்னும் மற்ற ரிப்போரட்டுகளும் உள்ளன.**

கூறுகின்றார்கள்: கானாவின் பக்கத்து நாடான டோகோவில் எல்லைப்புறத்தை ஒட்டியுள்ள வடக்குப் பகுதிகளில் பகுதிகளில் தப்லீக் பணிகள் செய்வதற்கான நல்வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. அவர்கள் பலமுறை இந்தப் பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்கள். தப்லீக் பணிகளைச் செய்துள்ளார்கள். இங்கு பெரும் எதிர்ப்பு இருந்து வந்தது. அவர்களது முயற்சியால் டோகோ நாட்டின் 5 பகுதிகளான மும்பகா, மும்புலாக், மாங்கோ, போலெக்ஸ் மற்றும் லெமோகாரா ஆகிய இடங்களில் ஜமாஅத்துகள் நிறுவப்பட்டன. இவ்வாறு புர்கினோஃபாஸோ நாட்டிலும் இவர் பல சுற்றுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன் பல்வேறு தப்லீக் மற்றும் தர்பிய்யத் பணிகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்துள்ளது.

**ஃபிஜி தீவின் அமீர் சாஹிப் ஃபஸ்லுல்லாஹ் தாரிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:**

ஹாஃபிஸ் ஜிப்ரேயில் ஸயீத் சாஹிப் 2003 ஆம் ஆண்டில் ஃபிஜி தீவிற்கு வந்த சமயத்தில் முதல் முறையாக நான் அவர்களை சந்தித்தேன். அவர்களுக்கு அருகில் இருக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஹாஃபிஸ் சாஹிபின் ஒரு நல்ல பழக்கத்தை அவர்களது முதல் சந்திப்பின் போதே நான் பார்த்து விட்டேன். அது என்னவென்றால், இரவில் ஹாஃபிஸ் சாஹிப் அவர்களது தமது கண்களைத் திறக்கும் போது அவர்கள் திருக்குர்ஆனை ஓதிக்கொண்டிருப்பார்கள். திருக்குர்ஆன் ஹாஃபிஸ் ஆக இருப்பதுடன் அவர்கள் பல்வேறு சிறப்புகளின் எஜமானராக இருந்தார்கள். தப்லீக் களத்தில் அனுபவமிக்கவராக திகழ்ந்தார்கள். ஒவ்வொரு சிறிய மற்றும் பெரிய நபரிடத்திலும் அவரது இயல்புக்கு ஏற்க தப்லீக் விசயங்களைப் பேசி வந்தார்கள். மார்க்க அறிவுடன் உலக விசயங்கள் தொடர்பான அறிவால் நிரம்பியிருந்தார்கள். ஒரு வெற்றிகரமான முபல்லிக்கைப் போன்று விசயங்களைப் பேசிக் கொண்டிருக்கும் போதே இஸ்லாத்தின் தூதுச் செய்தியை பிறருக்கு எட்ட வைத்து விடுவார்கள். அவர்களது பேசும் முறையானது மிகவும் செயற்கைத்தன்மையற்றதாக இருந்தது. சிரித்தவாறே மிக கடினமான விசயங்களைக் கூட மிகவும் அமைதியாக கூறிவிடுவார்கள்.

**கிரீபாத்தியின் முபல்லிக் சாஹிப் இப்ராஹீம் ஏச்சியார் கூட தனது கடிதத்தில் எழுதுகின்றார்கள்:**

ஹாஃபிஸ் அஹ்மது ஜிப்ரேயில் ஸயீது சாஹிப் கிரீபாத்தி, துவாலு மற்றும் பிற தீவுகளில் தப்லீக் செய்வதற்காக மிகவும் அதிகமாக சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வந்தார்கள். அவர்களது குடும்பம் அவர்களுக்கு பின்னால் முற்றிலுமாக தனிமையிலேயே இருந்து வந்தார்கள். பல்வேறு இடங்களுக்கு சுற்றுப்பயணம் செல்வார்கள். ஒருபோதும் தமது குடும்பம் பற்றி அவர்கள் கவலைப்பட்டதில்லை. இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக கலீஃபத்துல் மஸீஹ் என்னை தேர்ந்தெடுத்துள்ளார்கள். என்னை இங்கு அனுப்பியுள்ளார்கள். கலீஃபத்துல் மஸீஹ் எனக்காக துஆவும் செய்வார்கள் என்று கூறுவார்கள். இதனால் தப்லீகின் எந்த சந்தர்ப்பத்தையும் அவர்கள் கை நழுவ விட்டதில்லை. காலத்தின் கலீஃபாவின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப முழுமையாக செயல்பட வேண்டும் என்ற முயற்சியே எல்லா சமயத்திலும் அவர்களிடம் இருந்து வந்தது. அவர்கள் மீண்டும் கானாவில் பணி அமர்த்தப்பட்ட சமயத்தில் அவர்கள் தீவு நாடுகளுடனுள்ள தனது தொடர்பை முறிக்கவில்லை. மாறாக, தீவுகளில் தப்லீக் செய்வது தொடர்பாக அவர்களுக்கு மிகுந்த கவலை இருந்து வந்தது. 2010 ஆம் ஆண்டில் இவர்களை நான் மீண்டும் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு அனுப்பிய போது அவர்கள் விரிவான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு அங்கிருந்து பல தகவல்களையும் சேகரித்து வந்தார்கள். பல ஜமாஅத்துகளையும் நிறுவினார்கள்.

**கிரீபாத்தியின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ஹாஃபிஸ் அஹ்மது ஜிப்ரேயில் ஸயீது சாஹிப் அவர்கள் தனது நோயின் இறுதி நாட்களில் கரீபாத்தியின் முதல் அஹ்மதியான மதிப்பிற்குரிய அனீஸ் கிளாத்தி சாஹிப் மர்ஹூம் அவர்களின் மனைவிக்கு போன் செய்து அவர் ஜமாஅத்துடன் தொடர்பு வைக்க வேண்டும் என்று போதித்தார்கள். அப்போது அவர்கள், நீங்கள் எல்லா சமயத்திலும் இந்த விசயத்தை உங்கள் மூளையில் வைத்திருக்க வேண்டும் என்று மருத்துவமனையிலிருந்து போன் செய்து இதை அவர் கூறுகின்றார். ஆனால் ஒவ்வொருவருக்கும் தனது நோய் பற்றிய கவலைதான் இருக்கும். அதுவும் மிகவும் தொலைவிலுள்ள தீவுகளிலுள்ள ஒரு நபருக்கு போன் செய்து கூறுகின்றார்கள்.

அல்லாஹ் இஸ்லாம் என்ற அருளை உங்களுக்கு வழங்கியிருப்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். உங்களுக்கு இஸ்லாத்தை தேடுவதற்காக எந்த பயணமும் மேற்கொள்ள வேண்டியது வரவில்லை. அல்லாஹ் உங்கள் வீடுகளில் இஸ்லாத்தை கொண்டு வந்து சேர்த்து உங்கள் மீது மிகுதியாக அருள்புரிந்துள்ளான். எனவே ஒருபோதும் ஜமாஅத்தை விட்டுவிடக் கூடாது என்று கூறினார்கள்.

அஹ்மது ஜிப்ரேயில் ஸயீது சாஹிப் அவர்கள் மூலமாக எவர்கள் பைஅத் செய்திருந்தார்களோ அவர்களில் Medical Doctor ஆன அலி பிர்போ சாஹிபும் ஆவார். இவர் தனது மனைவி மக்களுடன் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். இவரது இரண்டு மகன்களும் Medical Doctor ஆக இருக்கின்றார்கள். இவர் கரீபாத்தி மொழியில் புலமை பெற்றவராவார். இப்போது கரீபாத்தி மொழியில் திருக்குர்ஆனை இவர் முழுமையாக மொழியாக்கம் செய்து முடித்து விட்டார். அதன் Revision இப்போது நடந்து வருகின்றது.

அல்லாஹ் அஹ்மதிய்யத்தின் இந்த பெருமைக்குரிய புதல்வரை தனது திருப்தியின் சுவர்க்கத்தில் நுழையும் படி செய்வானாக! அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு இவர்களைப் போன்ற நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான சிறந்த உதவியாளர்களை வழங்குவானாக! இவரைப் போன்ற தகுதியான, பணிவான, பற்றுள்ள ஜமாஅத் தொண்டர் நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்ட துக்கம் நமக்கு மிகவும் அதிகமாக இருக்கின்றது. ஆனால் இறைவனின் திருப்தியில் திருப்தி அடைவதுதான் ஒரு நம்பிக்கையாளரின் மகிமையாகும். மேலும் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் என்பதே நமது துஆவும் நமக்கு ஆதரவளிக்கக்கூடிய ஒன்றுமாகும். அவர்களது பிரிவால் மனித எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப எனக்கு ஏற்பட்டுள்ள கவலையையும் அல்லாஹ் தனது அருளால் அகற்றுவானாக!

கானாவில் இப்போது மத்ரஸத்துல் ஹிப்ஸ் நிறுவப்பட்டுள்ளது. எனது எண்ணத்திற்கேற்ப ஹாஃபிஸ்களின் முதல் வகுப்பு படித்து முடித்து இப்போது அங்கிருந்து வெளியேறியும் விட்டார்கள். ஸாஹிது தகுதியைப் பெறும் முபல்லிக்குகளை உருவாக்குவதற்கு அங்கு ஜாமிஆ அஹ்மதிய்யாவும் ஆரம்பமாகி விட்டது. அது குறைந்தபட்சம் மேற்கு ஆப்பிரிக்க மண்டலத்தை அல்லது முழு ஆப்பிரிக்காவையும் கூட பாதுகாக்கும். அதில் அனைவருமே ஹாஃபிஸ் சாஹிபை போன்றே அல்லது அவர்களை விடவும் சிறந்த ஜமாஅத் தொண்டர்களாக உருவாகும்படி அல்லாஹ் செய்வானாக! அவர்கள் தக்வாவில் நுட்பமான வழிகளில் நடக்கக் கூடியவர்களாக இருப்பார்களாக!

நான் ஏற்கனவே கூறியது போன்று இப்போது அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களில் இரண்டாவது நபரைப் பற்றியும் கூறுவேன். கடந்த சில நாட்களுக்கு முன் கொயடாவில் வைத்து இவருக்கு சஹாதத்தின் உயர் தகுதி கிடைத்திருக்கின்றது. இவர்களும் அந்த மக்களை சார்ந்வராக இருக்கின்றார். அவர்களைப் பற்றி இறைவன் கூறுகின்றான்: *எவர்கள் அல்லாஹ்வின் வழியில் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்களோ அவர்களை ஒருபோதும் மரணித்தவர்கள் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். அவர்கள் உயிருடன் இருக்கின்றனர். அவர்களது இறைவனிடமிருந்து அவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. (3:170)*

நான் ஏற்கனவே கூறியது போன்று இந்தப் பெருமை அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த நபர்களுக்கே கிடைத்திருக்கின்றது. அவர்கள் இறைவனது வழியில் கொல்லப்படுகின்றனர். தங்களது ஈமானை பாதுகாத்துக் கொள்வதற்காக தங்களது உயிரை காணிக்கையாக அர்ப்பணிக்கின்றனர். இதற்கு முன்னரும் நான் பலமுறை கூறியுள்ளேன். எதிரிகள் செய்கின்ற இந்த கொலையும் வரம்புமீறலும் இந்த ஆயுதங்களும் அஹ்மதிகளை அவர்களது மார்க்கத்தை விட்டும் முகம் திருப்பியவாறு விலகிச் செல்ல வைக்காது இன்சா அல்லாஹ்.

கொய்டாவில் இந்த கண்ணியத்தைப் பெற்ற இந்த சஹீதின் பெயர் **மன்சூர் அஹ்மது சாஹிப்**. இவர் மதிப்பிற்குரிய நவாப் கான் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் தேதி கொய்டாவிலுள்ள சேட்டிலைட் டவுணில் வைத்து சஹீதாக்கி இருக்கின்றார்கள். அவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத்தின் அறிமுகம் அவரது தந்தையாரான நவாப் கான் சாஹிப் அவர்களின் கொள்ளுப்பாட்டியான பேகோ சாஹிபா என்றழைக்கப்பட்ட மதிப்பிற்குரிய பேக் பாரி சாஹிபா அவர்கள் மூலமாக ஏற்பட்டது. மதிப்பிற்குரிய பேகோ சாஹிபா அவர்கள் காதியானுக்கு அருகிலுள்ள நங்கல் என்ற இடத்தில் வசித்து வந்தவராவார். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கைகளில் பைஅத் செய்திருந்தார்கள். இவ்வாறு அவர்கள் சஹாபியாவாக இருந்தார்கள். பாகிஸ்தான் தோன்றிய பிறகு இந்த குடும்பம் ஹிஜ்ரத் செய்து சாயிவால் மாவட்டத்தில் குடியமர்ந்தார்கள். பிறகு 1965 ஆம் ஆண்டில் இவர்கள் கொய்டாவிற்கு சென்று விட்டார். மன்சூர் அஹ்மது சாஹிப் சஹீது அவர்கள் 1978 ஆம் ஆண்டில் கொய்டாவில் பிறந்தார்கள். மெட்ரிக் படித்து முடித்த பிறகு 1996 –ல் தனது பணியை ஆரம்பித்தார்கள். Hardware கடையை ஆரம்பித்தார்கள். சிறிது காலத்திலேயே அவரது வியாபாரத்தில் அல்லாஹ் மகத்தான பரக்கத்தை வழங்கினான். இவரது சஹாதத் தொடர்பான சம்பவம் இதுவாகும்.

மர்ஹூம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் தேதி சேட்டிலைட் டவுணில் உள்ள இவரது வீட்டிலிருந்து காலை 8.00 மணி அளவில் அருகிலிருந்த தனது கடைக்கு நடந்து செல்வதற்காக வெளியே வந்தார்கள். அப்போது இருவர் மோட்டார் சைக்கிளில் வந்தனர். அவர்களில் ஒருவர் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே இறங்கி மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்கள் பக்கம் சென்றார். துப்பாக்கியால் அவர்களை சுட முயற்சி செய்தார். ஆனால் அவர் பக்கத்தில் வந்ததால் மன்சூர் சாஹிபிற்கும் அவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. சண்டை ஆரம்பமானது. மன்சூர் சாஹிப் அவர்களை அவர் தனது பிடியின் கீழ் கொண்டு வர முயற்சி செய்தார். மன்சூர் அஹ்மது சாஹிப் தன்னை அவரிடமிருந்து விடுவித்துக் கொண்டு தனது வீட்டை நோக்கி ஓடினார். இரு நபர்கள் இருந்ததால் அவர்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வீட்டிற்கு வருவதுதான் அவர்களுக்கு

சிறந்ததாக இருந்திருக்கும். வீட்டில் கேட்டிற்கு அருகிலுள்ள தூணில் மோதி அவர்களது முழங்காலில் அடிபட்டதால் அவர்கள் கீழே விழுந்து விட்டார்கள். தாக்குதல் நடத்தியவர் அவர்களுக்கு பின்னாலேயே வந்து கொண்டிருந்தார். மன்சூர் சாஹிப் அவர்கள் விழுந்ததும் அவர் அவர்களை துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார். முதல் தோட்டா அவர்களது தலையை உரசியவாறு சென்று விட்டது. இரண்டாவது தோட்டா தலையின் பின்பகுதியில் பட்டு நெற்றிக்கும் மூக்கிற்கும் இடையிலுள்ள பகுதி வழியாக வெளியே வந்து விட்டது. அதனால் அந்த சமயத்திலேயே அவர் சஹீதாகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

மர்ஹூமிற்கு நீண்ட காலமாக மத ரீதியாக எதிர்ப்புகளை சந்திக்க நேர்ந்தது. அக்கம்பக்கத்திலுள்ள கடைக்காரர்களும் அவர்களை எதிர்ப்பதில் முன்னணியில் இருந்தனர். அந்தப் பகுதியில் சிறிது காலமாக ஜமாஅத்திற்கு எதிராக புறக்கணிப்பு செய்வது அமைப்பு ரீதியாக ஒரு ஏற்பாட்டின் கீழ் நடைபெற்றது. சேட்டிலைட் டவுண் ஹல்காவிலுள்ள புகழ்பெற்ற பள்ளிவாசலான கோல் மஸ்ஜிதில் டெரா கலிகானிலிருந்து ஒரு மவ்லவி வந்து அஹ்மதிகளை கொலை செய்வது வாஜிபானது என்று ஃபத்வா கொடுத்து வந்தார். அந்த முழு பகுதியிலும் மக்களை தூண்டும் வகையிலுள்ள பிரசுரங்களை விநியோகம் செய்தார். கடந்த வருடம் சஹீது மர்ஹூமின் கடையை ஒட்டியிருந்த அஹ்மதிய்யத்தின் எதிரியின் கடையில் தீப்பற்றி எரிந்தது. இந்த விசயங்களிலிருந்து கூட அவர்கள் பாடம் படிப்பதில்லை.

பாருங்கள்! அவரது கடையில் தீப்பற்றி எரிந்தது. அதிலிருந்து அவருடைய எல்லா பொருள்களும் எரிந்து சாம்பலாகி விட்டது. சஹீது மர்ஹூமின் கடையும் நேரடியாக நெருப்பின் பிடியில் இருந்தது. ஆனால் அல்லாஹ் அற்புதமான முறையில் எல்லா வகையிலும் அந்த கடையைப் பாதுகாத்தான். அந்த கடையின் வெளியே கிடந்த பிளாஸ்டிக் போர்டு கூட அற்புதமான முறையில் பாதுகாப்பாக இருந்தது. இதைப்பார்த்து எல்லாரும் வியப்படைந்தனர். ஆனால் இந்த விசயங்கள் இந்த மக்களின் கண்களைத் திறப்பதற்கு போதுமானதாக இல்லை.

சஹீது மர்ஹூம் தனது குடும்பத்திலுள்ள அனைவரிடமும் மிகுந்த பரிவுடனும் அன்புடனும் நடந்து கொண்டார்கள். குடும்பத்திலுள்ள எவருக்கும் ஏதாவது பொருளோ அல்லது பொருள் உதவியோ தேவைப்பட்டால் அவர்கள் அந்த தேவையை நிறைவு செய்வார்கள். அதிகமாக விருந்தோம்பல் செய்யக்கூடியவராக இருந்தார். குறிப்பாக ஜமாஅத்திலுள்ள விருந்தினர்க்கு தொண்டு செய்யப்படாத நிலையில் அவர்களை அங்கிருந்து வருவதற்கு அவர்கள் விடுவதில்லை. தலைமையகத்திலிருந்து ஜமாஅத்தை சார்ந்தவர்கள் விருந்தாளிகளாக வரும்போது மற்ற அஹ்மதி சகோதரர்கள் அவர்களை தமது விருந்தாளியாக ஆக்கிக் கொள்ளும் போது அவர்களை தன்னுடன் அழைத்துச் செல்வதில் அவர்கள் பிடிவாதமாக இருப்பார்கள். 40 அல்லது 50 ஜமாஅத் சகோதரர்கள் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சியை நடத்துவதற்கு தனது வீட்டில் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள். வீட்டிலேயே அவர்களது உணவிற்கான ஏற்பாட்டையும் செய்வார்கள். அவர்களே விருந்தோம்பல் செய்வார்கள். ஜமாஅத்தின் திட்டங்களில் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கேற்பார்கள். இப்போது கூட ஹல்கா சேட்டிலைட் டவுணின் துணை காயித் ஆக அவர்கள் இருந்தார்கள். தஹ்ரீகே ஜதீது செயலராகவும் வக்ஃபே ஜதீத் செயலராகவும் இருந்ததுடன் மட்டுமின்றி ஹல்காவின் பாதுகாப்பு மற்றும் சீர்திருத்தக் கமிட்டியின் செயலர் என்ற நிலையிலும் தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.

சஹீது அவர்கள் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார். 2007 ஆம் ஆண்டு வஸிய்யத் அமைப்பில் இணைந்தார். இவரது சஹாதத் நிகழ்வதற்கு ஒரு வாரம் முன்பாக சஹீது மர்ஹூம் அவர்களின் தந்தையார் தமது கனவில் மக்கள் கூட்டமாக இருப்பதைப் பார்த்தார். எவருக்கோ திருமணம் நடக்கப் போவது போன்று தெரிந்தது. மேலும் எனது கைகளால் அந்த மண ஊர்வலத்தை நான் வழியனுப்பி வைக்கின்றேன் என்று இவர்களது தந்தையர் கூறினார்கள். இவ்வாறே அவர்களது மனைவி தமது கனவில் நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது எனது பிள்ளைகளும் எனது கணவரின் சகோதரியும் என்னுடன் இருந்தனர். வழியில் கருப்பு நிறத்திலிருந்த நாய் எங்களை கடிக்க வந்தது. நான் எனது கணவரின் சகோதரிக்கு பின்னால் மறைந்து கொள்கின்றேன். துஆ செய்யுங்கள் என்று அவர்களிடம் கூறுகின்றேன். ஆனால் அந்த கருப்பு நாய் எனது உயிர்நாடியைக் கடித்து விடுகிறது.

சஹீது மர்ஹூம் தனக்குப் பின்னால் தனது தந்தையரான மதிப்பிற்குரிய நவாப் கான் சாஹிப் அவர்களைத் தவிர தனது மனைவியான ஸபானா மன்சூர் சாஹிபா அவர்களையும் இரண்டு மகள்களான பத்து வயதாகும் நுஃமானா மன்சூர். இவர் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்துள்ள சிறுமி ஆவார். இவரையும் 8 வயது ஆகின்ற ஃபைஸா மன்சூர் அவர்களையும், மகளான 6 வயது ஆகின்ற தவ்ஹீது அஹ்மது. இவரும் வக்ஃபே நவ் சிறுவராவார். இவரையும் ஒரு சகோதரரான மக்ஸூது அஹ்மது சாஹிப் அவர்களையும் இரண்டு சகோதரிகளையும் விட்டு விட்டு சென்றுள்ளார். சஹீது மர்ஹூமின் தாயார் வஃபாத் ஆகிவிட்டார்கள். இவரது இன்னொரு தாயார் உயிருடன் இருக்கின்றார்.

நான் எந்த இரண்டு மர்ஹூம்கள் பற்றி உங்களிடம் கூறினேனோ அவ்விருவரது ஜனாஸா காயிப் தொழுகையை ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் தொழ வைப்பேன்.

பொதுவாக பாகிஸ்தானுக்காக இன்றைய நாட்களில் துஆ செய்யுங்கள். அஹ்மதி சஹீதுகள் தாங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்ற முயற்சி செய்கின்றனர். அஹ்மதிகளுக்கு வசதியான நிலை ஏற்படுகின்ற அந்த நேரத்தை அல்லாஹ் விரைவில் கொண்டு வருவானாக! அஹ்மதிகள் அமைதி பெருமூச்சு விடுபவர்களாக ஆகட்டும்.

இன்றிலிருந்து முஹர்ரம் மாதம் ஆரம்பமாகி விட்டது. முஹர்ரமில் முன்னரை விட அதிகமாக அஹ்மதிகளுக்கு கர்பலாவை ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்படுகிறது. இவர்களில் ஒருவர் மற்றவரை கொலை செய்கின்றனர். இந்த மாதத்திலிருந்து படிப்பினையைப் பெறுவதற்குப் பதிலாக முஸ்லிம்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரது கழுத்தை வெட்டுகின்றனர். இவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்.

குறிப்பாக முஹர்ரம் மாதத்தின் இந்த நாட்களில் தரூது ஓதுவதன் பக்கமும், ஸதக்கா கொடுப்பதன் பக்கமும் அதிகமாக கவனம் செலுத்துங்கள். முஸ்லிம் உம்மத்திற்கு இன்றைய நாட்களில் ஏற்பட்டுள்ள கடினமான சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் இவர்களுக்கு உண்மையின் வழிகளைக் கடைபிடிப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! அதன் மூலம் இந்த மக்கள் இந்த துன்பங்களிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும் இரட்சிப்பைப் பெற வேண்டும். முஸ்லிம் உம்மத் தப்பிப்பதற்கு இதை தவிர வேறு ஒரு வழியும் இல்லை. காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்வதைத் தவிர இவர்கள் தப்பிச் செல்வதற்கு வேறு எந்த வழியும் இல்லை. அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை இவர்களுக்கு வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAIT-UL-FUTUH MOSQUE, LONDON.

**ON 16.11.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456